2023 அக்டோபர் 11]

5. ஈரோடு நகரம், பட்டாக்கள் வழங்கப்பட்டதற்கு முதலமைச்சருக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது சம்பந்தப்பட்டதா அல்லது வேறு ஏதாவதா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன் அவர்கள் கூறுகின்ற ஓரிரு வார்த்தைகள் என்னவென்று கேட்டுவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன் அவர்கள்.*

***திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 75 ஆண்டுக்காலமாக ஈரோடு நகரைச் சார்ந்த மக்கள் போராடி, முன்வைத்த கோரிக்கை, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் திரு. ஸ்டாலின் அவர்களுடைய காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொல்வதை நான் பெருமையாகக் கருதுகின்றேன். ஈரோட்டிலே இருக்கின்ற கிட்டத்தட்ட 4,000 பேருக்கு இதுவரை பட்டாக்கள் கிடையாது. ஆனால், இவ்வளவு ஆண்டுக்கால போராட்டத்திற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றை வழங்கியிருக்கின்றார்கள் என்று சொன்னால், உண்மையாகவே நான் அவருக்கு ஈரோடு மக்களின் சார்பாக நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் வாழ்ந்து வருகின்ற பகுதியிலுள்ள 4,000 வீடுகளுக்கு இதுவரை பட்டா இல்லாமல் இருந்தது. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்கிறீர்களல்லவா!*

பிற்பகல் 12–20

திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்: *அதுமட்டுமல்ல, இதில் பெரிய விஷயம் என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் திரு.* K.K.S.S.R. *இராமச்சந்திரன் அவர்கள் கடந்த கூட்டத்திலே சொல்லியதைப்போல தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், முத்தமிழ் காவலர் கலைஞர் அவர்கள் பணியாற்றிய அந்த வீட்டில்தான் இன்றைக்கு நான் இருக்கின்றேன். இதுவரை பயத்தோடுதான் இருந்தேன்; காரணம் பட்டா கிடையாது. ஆனால், இன்றைக்குத்தான் ஈரோட்டிற்கு திரும்பிப் போகும்போது கொஞ்சம் தைரியமாக நான் செல்ல*

முடியும் என்பதையும் சொல்லிக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தவரையில், வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் நாங்கள் கண்டிப்பாக வேறுபாடு இல்லாமல் எல்லாக் காரியங்களையும் செய்வோம். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடித்துவிடட்டும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: ஒரு விளக்கம் வேண்டும். அப்படியென்றால் ஐயா அவர்கள் பட்டா இல்லாத வீட்டில்தான் இருந்தார்களா? (சிரிப்பு)

திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்: அது என்னைப் பாதிப்பதைவிட உங்களைத்தான் அதிகம் பாதிக்கும். (சிரிப்பு) அதேபோல், கிட்டத்தட்ட 4 ஆயிரம் பேருக்கு இன்றைக்கு பட்டாக்களை அறிவித்திருக்கின்றார்கள். சொன்னதையும் செய்வோம், சொல்லாததையும் செய்வோம் என்று சொன்னவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்பதை தேர்தல் முழக்கத்தோடு நிறுத்திவிடவில்லை. இந்த இரண்டரை ஆண்டுக்காலமாக நன்றாக செய்துகொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நான் பேசுவதற்கு அதிக நேரம் எடுத்துக்கொண்டால், நீங்கள் அடுத்தமுறை எனக்கு வாய்ப்புத் தரமாட்டீர்கள். ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கின்ற அதே நேரத்தில், பாசத்திற்குரிய அமைச்சர் மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடு எங்களுடைய அமைச்சர், எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர்; இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஈரோடு மாநகர் மட்டுமல்ல என்னுடைய தொகுதிக்கும் சேர்த்து அவர்தான் M.L.A. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்தில், மாண்புமிகு திரு. எ.வ. வேலு அவர்களிடத்தில் சில கோரிக்கைகளை காலையில் வைத்தேன். அதைச் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.